பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

01 09 2024 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்காசியாவில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை விரைவாக மீட்டெடுப்பதற்கான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஜம்மு காஷ்மீரில் மூன்றாவது மற்றும் இறுதிகட்ட வாக்குப்பதிவு இன்று காலை தொடங்கியது.

3. சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு ஒரு மாதகால கொண்டாட்டத்தை தில்லியில் மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு. டாக்டர் வீரேந்திர குமார் இன்று தொடங்கி வைக்கிறார்.

4. கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு வழங்கப்படும் உயிர்காக்கும் மருத்துவ சாதனங்களின் உதவியை திரும்பப் பெறுவதற்கான நிபந்தனைகள் தொடர்பான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

5. தெற்காசிய இளையோர் கால்பந்து சாம்பியன் பட்டத்தை இந்தியா வென்றது.

6.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

ஜம்மு கஷ்மீரில் மூன்றாவது மற்றும் இறுதிகட்ட வாக்குப்பதிவு இன்று காலை தொடங்கியது.

ஏழு மாவட்டங்களில் உள்ள 40 தொகுதிகளில் வாக்குப்பதிவிற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

40 தொகுதிகளில் 16 தொகுதிகள் கஷ்மீரிலும், 24 தொகுதிகள் ஜம்மு மண்டலத்திலும் உள்ளன.

39 லட்சத்து 18 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இதற்காக 5 ஆயிரத்து 60 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

புலம்பெயர்ந்த வாக்காளர்களுக்காக 24 சிறப்பு வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 19 ஜம்முவிலும், 4 தில்லியிலும், ஒன்று உதம்பூரிலும் அமைக்கப்பட்டுள்ளன.

கடைசி கட்ட தேர்தலில் 415 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

அவர்களில் முன்னாள் துணை முதலமைச்சர் திரு. முசாஃபர் உசேன் பெய்க், திரு. சஜத் கனிலோன், திரு. நஸீர் அஸ்லம், திரு. சௌத்ரி லால்சிங் உள்ளிட்டோர் முக்கியமான வேட்பாளர்கள் ஆவர்.

<<<<>>>>

தேர்தல் பணியில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

வாக்குப்பதிவை அமைதியாகவும், நேர்மையாகவும் நடத்தி முடிக்க விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே நடைபெற்ற முதற்கட்ட தேர்தலில் 61 சதவீத வாக்குகளும், இரண்டாவது கட்ட தேர்தலில் 57 சதவீத வாக்குகளும் பதிவானது.

மூன்று கட்ட தேர்தல்களில் பதிவான வாக்குகள் வரும் 8ஆம் தேதி எண்ணப்பட்டு, அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும்.

<<<<>>>>

பிரதமராக திரு நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவியேற்ற முதல் 100 நாட்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு, சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

மூத்த பத்திரிகையாளர் வெங்கடேஷ், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் முதல் பகுதி இன்றிரவு மணி 9.15-க்கு ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்று முதல் 100 நாட்களுக்குள் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற கட்டமைப்புகளை மேம்படுத்த முக்கியமான நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நகர்ப்புற பகுதிகளில் வசிக்கும் நலிந்த பிரிவினருக்கு வீடு கட்டுவதற்கான பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டத்திற்கு மத்திய அரசு இந்த கால கட்டத்தில் அனுமதி அளித்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நகர்ப்புறங்களில் வசிக்கும் ஒரு கோடி நலிந்த மற்றும் நடுத்தர குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் வீடுகள் கட்டித் தரப்படும் என்றும் அவர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் மெட்ரோ ரயில் சேவை 21 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்றும், நாடு முழுவதும் தற்போது 700 கிலோ மீட்டர் நீளத்திற்கு மெட்ரோ ரயில் சேவை நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் நகர்ப்புற கட்டமைப்புத் திட்டங்களில் மத்திய அரசு 8 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை முதலீடு செய்ததாகவும் அவர் கூறினார்.

இது 2004ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு முதலீடு செய்ததைவிட 21 மடங்கு அதிகம் என்றும் திரு. மனோகர் லால் கூறினார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லி வந்துள்ள ஜமைக்கா பிரதமர் திரு. **Andrew Holness** உடன் இன்று இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுகள் நடத்துகிறார்.

இந்த பேச்சுகளின் முடிவில் இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமராக பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக இந்தியா வந்துள்ள ஜமைக்கா பிரதமர், புதுதில்லியில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் ஆகியோரையும் சந்தித்துப் பேச உள்ளார்.

தனது நான்கு நாள் பயணத்தின்போது தில்லியில் தொழில் மற்றும் வர்த்தக சபை பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேச உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாளை திரு. **Andrew Holness** வாரணாசி செல்ல உள்ளார்.

<<<<>>>>

மேற்காசியாவில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை விரைவாக மீட்டெடுப்பதற்கான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று தொலைபேசியில் இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவுடன் தாம் பேசியதாக சமூக வலைப்பதிவில் கூறியுள்ளார்.

மேற்காசியாவில் சமீபத்திய நிலைகள் குறித்து கேட்டறிந்த அவர், உலகில் தீவிரவாதத்திற்கு இடமில்லை என்று கூறினார்.

பிராந்திய விரிவாக்கத்தை தடுப்பதும், பணயக் கைதிகள் அனைவரையும் பாதுகாப்பதாக விடுவிப்பதை உறுதி செய்வதும் அவசியம் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு வழங்கப்படும் உயிர்காக்கும் மருத்துவ சாதனங்களின் உதவியை திரும்பப் பெறுவதற்கான நிபந்தனைகள் தொடர்பாக வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

உயிர்பிழைக்க முடியாத அல்லது குணப்படுத்த முடியாத நிலையில் மரணத்தை எதிர்நொக்கி உள்ள நோயாளிகளுக்கு இந்த நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மூளையில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டு 72 மணி நேரத்திற்குப் பிறகும் சிகிச்சையில் பலனளிக்காத நோயாளிகள் இந்தப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உயிர்காக்கும் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நோயாளிகளுக்கு உயிர்காக்கும் மருத்துவ சாதனங்களின் உதவியுடன் சிகிச்சை அளித்தாலும் அவர்கள் உயிர்பிழைக்க வாய்ப்பில்லை என்ற நிலையில் உயிர்காக்கும் சாதனங்களை திரும்பப் பெறுதல் குறித்து பரிசீலிக்கப்படும் என்று வரைவு வழிகாட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பொதுமக்களிடம் மத்திய சுகாதார அமைச்சகம் கருத்து கேட்டுள்ளது.

<<<<>>>>

சர்வதேச முதியோர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புதுதில்லியில் நடைபெற உள்ள நிகழ்ச்சியில் மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் கலந்துகொண்டு ஒருமாத கால கொண்டாட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

மூத்த குடிமக்களுக்கான நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்க உள்ளார்.

மூத்த குடிமக்களின் உரிமைகள், நல்வாழ்வு உள்ளிட்டவை தொடர்பாக தேசிய சமூக பாதுகாப்பு நிறுவனத்தால் தொடர் உரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஹரியானா மாநில சட்டப்பேரவைக்கு இம்மாதம் 5ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில், அம்மாநிலத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி வேட்பாளரை ஆதரித்து அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சருமான திரு. யோகி ஆதித்யநாத் நேற்று பிவானி மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் ஏராளமான வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தியும், பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தியும் நேற்று அம்பாலா மாவட்டத்தில் நாராயண்கர் என்ற இடத்தில் உரையாற்றினர்.

பிஜேபி அரசியல் சாசனத்தை மாற்றியமைக்க முயற்சிப்பதாக அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.

பிஜேபி ஆட்சியில் வேலையின்மை அதிகரித்துவிட்டதாகவும் அவர்கள் கூறினர்.

<<<<>>>>

நேபாளத்தில் மழை மற்றும் வெள்ளத்திற்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 209ஆக அதிகரித்துள்ளது.

29 பேரை காணவில்லை என்றும், அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் நேபாள உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மீட்பு நடவடிக்கையில் நேபாள ராணுவத்தினரும், காவல்துறையினரும் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை 4 ஆயிரத்து 500 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

மோசமான வானிலை நிலவும் பகுதியில் மீட்புப் பணிகள் தடைபட்டுள்ளன.

மழை மற்றும் வெள்ளத்தால் பல இடங்களில் சாலைகளும், மேம்பாலங்களும் கடுமையாக சேதமடைந்துள்ளன.

மலைப் பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக போக்குவரத்து தடைபட்டுள்ளது.

<<<<>>>>

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குஜராத், மணிப்பூர் மற்றும் திரிபுராமாநிலங்களுக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியில் இருந்து முன்பணமாக 675 கோடி ரூபாய் வழங்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தத் தொகையில் குஜராத் மாநிலத்திற்கு 600 கோடி ரூபாயும், மணிப்பூருக்கு 50 கோடி ரூபாயும், திரிபுரா மாநிலத்திற்கு 25 கோடி ரூபாயும் வழங்க ஒப்புதல்அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழையின்போது ஏற்பட்ட மழை மற்றும் நிலச்சரிவால் இம்மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய மத்திய அரசு தயாராக உள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு அசாம், மிசோரம், திரிபுரா, கேரளா, நாகாலாந்து, ஆந்திரா, தெலங்கானா ஆகிய மாநிலங்களில் கடுமையான மழை காரணமாக வெள்ளச் சேதம் ஏற்பட்டது.

இந்த சேதங்களை மதிப்பீடு செய்வதற்காக மத்திய குழுக்களும் இம்மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அந்த குழுக்கள் தரும் அறிக்கையின் அடிப்படையில்மேலும் நிதியுதவி வழங்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

--------------

தெற்காசிய இளையோர் கால்பந்து சாம்பியன் பட்டத்தை இந்தியா வென்றது.

பூடானில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் நடப்புச் சாம்பியன் இந்தியா 2-0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.

இந்தியா தரப்பில் முகமது கைஃப், நஜ்முல் ஹூடா ஆகியோர் கோல் அடித்தனர்.

**<<<<The End>>>>**